திராவிடர் கலாச்சாரம்!



ஆரியக் கலாச்சாரம் வேறு; திராவிடர் கலாச்சாரம் வேறு என்பது பற்றி, ஆராய்ச்சியாளர்கள் தெளிவாகவே கூறியுள்ளனர்.

இந்தியாவிலேயே முதன் முதல் நாகரிகத்தைப் புகுத்தியவர்கள் ஆரியர்கள்தான் என்ற பொய்யுரை ஒழியக் காலம் பிடித்தது.

ஆரியத்தின் துணையின்றி, மிகப் பழங்காலம் தொட்டு, இங்கே வளமான ஒரு நாகரிகம் ஓங்கியிருந்த உண்மையை, உலகு உணர நாட்களாயின.

பண்டைத் தமிழரின் வாழ்வு பாழ்பட்டதும், வீரம் சரிந்ததும், கலை கறையானதும், நிலை குலைந்ததும், ஆரியத்தின் கூட்டுறவால் நேரிட்ட அவதிதான் எனும் உண்மையை உலகு முதலிலே தெரிந்துகொள்ளவில்லை. இந்தியாவை ஆரிய வர்த்தமென்று கூறியும், இந்திய நாகரிகத்தையே ஆரிய நாகரிகம் என்று மொழிந்தும் உலகு கிடந்தது.

பேராசிரியர் சர்.ஜான் மார்ஷல், திராவிடப் பண்புகளை ஆராய்ந்தறிந்து கூறிய போதுதான், மேனாட்டாரின் கண்களிலிருந்த கறையும் கருத்திலிருந்த மாசும் நீங்கிற்று. பிறகு ஆரியம், திராவிட நாகரிகத்தை எவ்வளவு பாழ்படுத்திற்று என்ற ஆராய்ச்சி வரலாயிற்று.

- பேரறிஞர் அண்ணா

வல்லம் ஒன்றியம் - கல்லேரி கிராமத்தில்

நகரும் நியாய விலை கடை!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி செப் 15-

விழுப்புரம் மாவட்டம் கூட்டுறவு துறை சார்பில் வல்லம் ஒன்றியம் மேல் சித்தாமூர் ஊராட்சி கல்லேரி கிராமத்தில் நகரும் நியாய விலை கடை திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குவல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கவுன்சிலர் லட்சுமி லட்சுமணன், ஊராட்சி மன்ற தலைவர் மகிமை தாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டுறவு சார் பதிவாளர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நகரும் நியாய விலை கடையை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்: திமுக ஆட்சியின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்ததின் பலனாக இரண்டு கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று ரேஷன் பொருட்கள் வாங்கிய நிலையை மாற்றி மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்கின்ற அரசாக திமுக அரசு திகழுவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம்தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் இளம்வழுதி, அண்ணாதுரை,துரை, கூட்டுறவு சார்பதிவாளர் குமரவேல்,வட்ட வழங்க அலுவலர் மலர்விழி,மாவட்ட கவுன்சிலர்கள் அன்பு செழியன், சசிகலா மோகனசுந்தரம், ஒன்றிய கவுண்சிலர்லட்சுமி லட்சுமணன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கணபதி, முருகேசன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் முருகன்,ஒன்றிய நிர்வாகிகள் பாண்டியராஜன், ராமதாஸ், பழனி, கண்ணன், கொங்கரப்பட்டு கண்ணன், முருகன், ஜானகிராமன்,மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கார்வண்ணன், ஊராட்சி நிர்வாகிகள் காசிநாதன். பார்த்திபன், காட்சன், கமலக்கண்ணன், வேலியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேல்சித்தாமூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் தமிழ்மணி நன்றி கூறினார்.

உலகப் பொதுமறைத் தந்தை திருவள்ளுவர்!

உலகில் வேறு எந்த மொழியில் தோன்றிய எத்தகைய சிறந்த நூலும் இவருடைய அற நூலுக்கு இடையே இல்லை என்னும் பெருமையை எய்தியுள்ளார் ஓர் அறிவுப் பெருங்கடல் !

மற்ற மற்ற அறவாணர் அனைவரும் தங்கள் அறநெறிகளை எடுத்துரைக்க நிறைய சொற்களையும் நீண்ட நீண்ட வரிகளையும் பயன்படுத்தியுள்ள நிலையில் ஏழே சொற்களில், ஒன்றே முக்கால் வரியிலேயே தம் அறநெறிகளைப் பாடல் வடிவிலேயே படைத்துள்ளார் அந்த அறிவுப் பெருமழை !

மக்களின் வழிகாட்டிகளாக வந்த மற்ற மாமனிதர்கள், கண்ணுக்குத் தென்படாத கடவுளுக்கே சிறப்பிடம் தந்து, மதத்தை உருவாக்கி, அதன் மூலமே அறநெறிகளைப் பரப்பியுள்ள நிலையில் - கண்ணாரக் காணக்கூடிய இயற்கைக் காட்சிகளின் வாயிலாகவே மனிதரின் நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற நன்னெறிகளை, விழிப்பூட்டும் அழியா விளக்குகளாக ஏற்றிச் சென்றுள்ளார் அந்தப் பகுத்தறிவுச் செங்கதிரோன் !

அவர்தாம் விண்ணைப்போல் விரியும் நுண்ணறிவுக்குத் தாயகமான திருவள்ளுவர் !

- பேரறிஞர் அண்ணா

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில்

பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திண்டுக்கல், செப். 15-

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் மூ. காமாட்சி தலைமையில் 14.09.2023, வியாழக் கிழமை அன்று காலை 11.00 மணியளவில் திண்டுக்கல் கலைஞர் மாளிகையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், மு.பிலால் உசேன், எம்.மார்கரெட்மேரி, மாவட்ட பொருளாளர் கு.சத்திய மூர்த்தி மற்றும் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் தலைநகரங்களில் சரியான தனியார் இடத்தினை தேர்வு செய்து தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை நிறுவுவதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

தென்னகத்து காந்தி இந்நாட்டு இங்கர்சால் என அனைவராலும் பாராட்டப்படும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நம்முடைய மாவட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், ஊர் கிளை, வார்டு, வட்டக் கிளை தோறும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்குவது என தீர்மானி க்கப்பட்டது.

நமது திராவிட முன்னேற்ற கழகம் ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாள் விழா, கழகம் தோன்றிய நாள் என முப்பெரும் விழாவாக தொடர்ந்து சிறப்பாக நடத்தி கழக முன்னோடிகளுக்கு விருதுகள் வழங்கி கௌரவிப்பது வழக்கம். இந்த ஆண்டு வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா அருகில், கந்த நேரியில் 17.09.2023, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறுகிறது. இவ்விழாவில் இந்தியாவின் தலைச்சிறந்த சமூகநீதிக் காவலராகவும் சிறந்த முதல்வராக திகழ்ந்து இந்த நாட்டில் இருக்கிற அனைவருக்கும் பாதுகாப்பு கவசமாகவும் விளங்கக்கூடிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் ஒட்டுமொத்த உருவமாக திகழக்கூடிய வரலாற்று சிறப்புமிக்க கழகத் தலைவரும் தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பெரியார் விருதினை மயிலாடுதுறை கி.சத்தியசீலன் அவர்களுக்கும் அண்ணா விருதினை மீஞ்சூர் சுந்தரம் அவர்களுக்கும், கலைஞர் விருதினை ஐ.பெரியசாமி அவர்களுக்கும், பாவேந்தர் விருதினை தென்காசி திருமதி.மலிகா கதிரவன் அவர்களுக்கும், பேராசிரியர் விருதினை பெங்களூர்ந. இராமசாமி அவர்களுக்கும் வழங்கி சிறப்புரையாற்றவுள்ளார்கள். எனவே இவ்விழாவில் திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்திலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு சிறப்பிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இதில் முத்தாய்ப்பாக, 1992ஆம் ஆண்டு மாவட்டச் செயலாளர் பொறுப்பேற்ற நாள் முதல் தலைவர் கலைஞர், தளபதியார் வழியில் சிறுதும் அடிபெறாமல் மாற்றுச் சிந்தனைகள் ஏதுமில்லாமல் கழகமே தனது உயிர்மூச்சு என தலைவர் கலைஞர், மாண்புமிகு தளபதியார் அவர்களின் அன்புக் கட்டளைகளை யேற்று, திண்டுக்கல் மாவட்டத்தில் நம்மையெல்லாம் வழி நடத்திக் கொண்டிருக்கும், மாவட்ட கழகச் செயலாளர், மண்டலப் பொறுப்பாளர், மாவட்ட அவைத்தலைவர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் என பல பதவிகள் வகித்தும் தற்போது கழக துணைப் பொதுச் செயலாளராகவும் இருந்து நம்மையெல்லாம் வழிநடத்தி, தலைவர் கலைஞர், தளபதியார் மற்றும் கழகம் தான் தன் உயிர்மூச்சு என்று வாழ்ந்துகொண்டிருக்கும் கழக துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான மாண்புமிகு.இ.பெரியசாமி அவர்களுக்கு கழகத்தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலில் தலைமைக் கழகம் சார்பில் கலைஞர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருதை அறிவித்து திண்டுக்கல் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் அவர்களுக்கும், இளைஞர் அணிச் செயலாளரும், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மற்றும் தலைமை கழகத்திற்கும் நெஞ்சார்ந்த நன்றியினை மாவட்ட கழகம் தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நமது மாவட்டத்தில் தலைமை கழகம் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள பொறுப்பாளர்களின் அறிவுறுத்தலின்படி, அனைத்து அணியின் மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டு அனைத்து பகுதிகளிலும் பட்டிமன்றம், பாட்டுமன்றம், பொதுக் கூட்டங்கள், விளையாட்டு போட்டிகள் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தி நமது மாவட் டத்திற்கு பெருமை சேர்க்கவேண்டும் என தீர்மானி க்கப்படுகிறது.

கழக அரசின் மிக முக்கியமான மக்கள் நலத்திட்டமான கலைஞர் உரிமைத் தொகைத் திட்டமானது பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 இன்று முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் தொடங்கி வைக்கப்படுகிறது. பெறப்பட்ட 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்களில் 1 கோடியே 6 லட்சம் பேர்களுக்கு இந்தஉரிமைத்தொகை வழங்கப்படுகிறது. நிராகரிக்க ப்பட்டவர்களுக்கு என்ன காரணம், திரும்ப விண்ணப்பி ப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். ஒரு கோடி பெண்கள் என்பது கிட்டத்தட்ட ஒரு கோடி குடும்பங்கள் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். கடுமையான நிதிச்சூழலிலும் ஒரு கோடி மகளிர் பயன்பெறும் வகையில் தொடங்கப்படும் இத்திட்டத்தை அனைத்து மக்களிடமும் முழுமை யாகக் கொண்டு சேர்க்க வேண்டியது மிகவும் அவசியம். இத்திட்டத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ள அனைத்து பகுதிநகரஒன்றியகிளைக் கழகச் செயலாளர்கள், சார்பு அணியினருக்கு அறிவுறுத்தி தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

1.கோலம்: 1000 ரூபாய் திட்டத்தை முன்னிறுத்தி வீடுகளில் 'கலைஞர் உரிமைத் தொகைக்கு நன்றி, 'உரிமைத் தொகை 1000' போன்ற வாசகங்களை எழுதி கோலமிடலாம். அனைத்து நிர்வாகிகள், பயனாளிகள் வீடுகளில் கோலமிடப்படுவதை நிர்வாகிகள் அனைவரும் கண்காணிக்க வேண்டும். 2. சுவ ரொட்டிகள்:

2.சுவர் விளம்பரங்கள்:

கழகத்தின் சுவர் விளம்பரங்களில் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், கலைஞர் உரிமைத் தொகை ஆகிய திட்டங் களை முன்னிலைப்படுத் தும் வகையில் சுவர் விளம்பரங்களை எழுத வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

3.ஆட்டோ விளம்பரம்:

உள்ளூரில் ஆட்டோ ஏற்பாடுசெய்துகுறைந்தபட்சம் 2 நாட்களுக்கு அனைத்துப் பகுதிகளிலும் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், கலைஞர் உரிமைத் தொகை உள்ளிட்ட அரசின் இரண்டாண்டு சாதனைகளை விளக்க வேண்டும்.

இன்றைய அரசியல் சூழ் நிலையில் ஒன்றிய அரசு எவ்வளவோ நிதி பற்றாக்குறையை ஏற்படுத்திய போதும், தேர்தல் காலத்தில் சொன்ன வாக்குறுதிகளில் 85 சதவீதத்தை நிறை வேற்றிய கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களின் தலைமையிலான தமிழக அரசிற்கு நன்றி பாராட்டுகிறோம்.

பள்ளிசெல்லும் குழந்தைகள் பசியாற காலை சிற்றுண்டி திட்டம் கொண்டு வந்த கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையிலான தமிழக அரசிற்கு நன்றி பாராட்டுகிறோம்

உலக அரங்கில் இந்திய அளவில் பெண்களுக்கு விடியல் பயணம், மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி, புதிய கடன் 12 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் ஆக உயர்த்தியது, உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 50 விழுக்காட் டுக்கு மேல் மகளிர்க்கு பொறுப்பு, பெண்கள் கல்வி வளர்ச்சிக்காக புதுமைப்பெண் திட்டம், வரும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் நாளான 15ல் மகளிர் உரிமைத்தொகை திட்டம் வழங்குவது போன்ற மகளிர் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை கொண்டு வந்த கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையிலான தமிழக அரசிற்கு நன்றி பாராட்டுகிறோம்.

இந்திய அளவில் மதச்சார்பற்ற மகத்தான இந்தியா கூட்டணியை உருவாக்கி, இந்திய நாட்டில் பசி, பட்டினி, வேலையின்மை, இனவெறி, மதவெறி, மொழிவெறி, பெண் அடிமை ஆகியன தலை தூக்க காரணமாக இருந்த பிரிவினைவாத சக்திகளை அகற்றி, மீண்டும் சமூக நீதியை நிலை நாட்டும் வகையில் மக்கள் பாராட்டும் மகத்தான அரசை கொண்டு வந்த நமது கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் பணியை இந்த கூட்டம் பாராட்டுகிறது.

சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டிற்கு நமது மாவட்டத்திலிருந்து அதிகப்படியான இளைஞர்கள், இளைஞர் அணி சீருடையுடன் கலந்து கொள்வதென தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பேரறிஞர் அண்ணா – தந்தை பெரியார் பிறந்தநாள்!

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் - அண்ணா, பெரியார் சிலைகளுக்கு மாலை!

கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், செப். 15 -

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் மற்றும் 17.9.2023 தந்தை பெரியார் பிறந்தநாள் அன்று கடலூர் கிழக்கு மாவட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர. பகுதி, பேரூர் பகுதிகளில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் அவர்களின் சிலை மற்றும் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, கழக கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டுமென

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

இன்று (15.09.2023 - வெள்ளிக்கிழமை) பேரறிஞர்அண்ணா பிறந்தநாள் மற்றும்17.9.2023தந்தைபெரியார்பிறந்தநாள்அன்றுகடலூர்கிழக்குமாவட்டத்தில்மாநகர, ஒன்றிய, நகர. பகுதி, பேரூர்பகுதிகளில்அமைந்துள்ளபேரறிஞர் அண்ணாமற்றும்தந்தைபெரியார்அவர்களின்சிலைமற்றும்திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தி, கழக கொடியேற்றிநலத்திட்டஉதவிகள்வழங்கிடவேண்டும்.

அதுசமயம் இந்நிகழ்ச்சிகளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகரமேயர், ஒன்றிய குழுத் தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்டக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை , இலக்கிய, பகுத்தறிவுரப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர்அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர்அணி, மருத்துவர்அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர்நலஉரிமைப்பிரிவு, தகவல் தொழில்நுட்பபிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல்அணி, அமைப்புசாராஓட்டுநர்அணி, தொழிலாளர் அணி, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகமு ன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வேலூரில் தி.மு.க. கழகத்தின் பவளவிழா, முப்பெரும் விழா!

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாய் பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கள்ளக்குறிச்சி, செப். 15 -

வேலூரில் வருகின்ற 17 ஆம் தேதி நடைபெற உள்ள திமுகழகத்தின் பவள விழா,முப்பெரும் விழாவில், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும். என கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழகசெயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா - திமுக பவள விழா ஆண்டு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்தநாள் விழா, கழகம் தொடங்கிய நாள் ஆகிய முப்பெரும் விழா 17.09.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை வேலூரில் பள்ளிக்கொண்டான், டோல்கேட் அருகில் நடைபெறும். இந்த முப்பெரும் விழாவில்,

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் தளபதி அவர்கள் கலந்து கொண்டு விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

அது சமயம் முப்பெரும் விழாவில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் சிறப்புரை ஆற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தண்டபாணி, அவைத் தலைவர் காமாட்சி, துணைச் செயலாளர்கள் நாகராஜன், மார்கிரேட் மேரி, பிலால் உசேன், பொருளாளர் சத்தியமூர்த்தி மற்றும் கழக ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளனர்.